

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் – பொன்னேரி நகர மன்ற தலைவர் டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் ஆகியோரின் பேரனும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளருமான க.சு.தமிழ் பிரியன் – தாரா ஆகியோரின் ஆண் குழந்தைக்கு திராவிடச் செல்வன் என பெயர் சூட்டினார். உடன் மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு.தமிழ் உதயன், டாக்டர் க.சு.செந்தில் உள்ளனர்.



சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் தி.மு.க பொதுச் செயலாளர் துரைமுருகன் – சாந்தகுமாரி அவர்களின் பேத்தி – வேலூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கதிர் ஆனந்த் எம்.பி. – சங்கீதா ஆகியோரின் மகள் திருமண நிச்சயதார்த்த விழா அழைப்பிதழை வழங்கி வாழ்த்துப் பெற்றனர்.

### கரூர் சம்பவம்: கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் – தமிழ்நாடு காவல்துறைக்கு எதிராக பொய்யான தகவல் கூறிய –

# ஆதவ் அர்ஜுனாவின் பொறுப்பற்ற பேச்சுக்கு எதிராக வழக்கு!

## உச்சநீதிமன்றத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மனு தாக்கல்!

புதுடெல்லி, ஜூலை 5-

திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க.), அதன் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்களின் மூலம், கரூர் சம்பவம் தொடர்பாக அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவின் பொறுப்பற்ற, தவறாக வழிநடத்தும், தீங்கிழைக்கும் மற்றும் மரியாதையற்ற பேச்சுக்கு எதிராக, உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

அந்தப் பேச்சு, தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், மற்றும் தமிழ்நாடு காவல்துறை ஆகியோருக்கு எதிராக பொய்யான ஒரு கருத்தை உருவாக்க முயற்சிப்பதோடு மட்டுமல்லாமல், உச்சநீதிமன்றத்தின் உத்தரவின்படி நடைபெற்று வரும் விசாரணையை பாதிக்கும் வகையில் பொதுமக்களின் கருத்தைத் திசை திருப்பும் நோக்கத்துடனும் அமைந்துள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தி.மு.க. உச்ச நீதிமன்றத்தை அணுகி, பின்வரும் நிவாரணங்களை கோரி மனுத் தாக்கல் செய்துள்ளது:

**கோரிக்கைகள்**

நீதிமன்றம் தயவுகூர்ந்து பின்வரும் உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறு மிகவும் பணிவுடன் விண்ணப்பிக்கப்படுகிறது:

A. இவ்விடைக்கால மனுவை (Interlocutory Application) அனுமதித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் (திமுக) அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதியை மேற்கண்ட சிறப்பு அனுமதி மனுவில் (Special Leave Petition) எதிர்மனுதாரராக (Party Respondent) இணைக்க, நீதியின் நலன் கருதி உத்தரவிட வேண்டும்.

B. இந்த நீதிமன்றத்தின் உத்தரவின்படி மத்திய புலனாய்வு அமைப்பு (CBI) மேற்கொண்டு வரும் விசாரணை நிறைவடையும் வரை, சி. ஜோசப் விஜய், ஆதவ் அர்ஜுனா, புஸ்ஸி ஆனந்த், சி.டி. நிர்மல் குமார் அல்லது குற்ற எண் 855/2025இல் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அல்லது



விசாரணையுடன் தொடர்புடைய வேறு எவரும், குற்றப்பொறுப்பை யார் மீதும் சுமத்தும் வகையிலோ, அரசியல் எதிரிகளை மிரட்டும் வகையிலோ அல்லது நிலுவையில் உள்ள விசாரணையின் சாராம்சம் குறித்து அதன் நியாயமான மற்றும் சுதந்திரமான போக்கை பாதிக்கும் வகையில் எந்தவொரு பொதுக் கருத்தையும் வெளியிடக் கூடாது என்று உத்தரவிட வேண்டும்.

C. மாநில அரசு, கரூர் நெரிசல் விபத்தில் உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தோரின் குடும்பங்களுக்கு இழப்பீடு (Ex Gratia), கருணை அடிப்படையிலான அரசு வேலை வாய்ப்பு (Compassionate Appointment), அரசாணைகள் மற்றும் பிற நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கு உரிமை உடையதாக இருந்தாலும், சிபிஐ விசாரணை நிலுவையில் இருக்கும் காலத்தில், நீதிமன்றம் வகுத்துத் தரும் நடைமுறைகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளின் அடிப்படையிலும், முன்மொழியப்படும் நடவடிக்கையை சிபிஐ முன் தாக்கல் செய்த பின்னருமே அவ்வுதவிகள் வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் நடைபெற்று வரும் விசாரணையின் நேர்மையும், முக்கிய சாட்சிகளின் சாட்சியங்களும் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

D. 02.07.2026 அன்று ஆதவ் அர்ஜுனா வெளியிட்ட பொதுக் கருத்துகள், குற்ற எண் 855/2025 தொடர்பான விசாரணையை பாதிக்கும் வகையிலும், சாட்சிகளைக் கலைக்கும் (Witness Tampering) நோக்கத்துடனும், விசாரணைக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் அமைந்துள்ளதால், அவற்றின் மீது மத்திய புலனாய்வு அமைப்பு (CBI) வழக்குப் பதிவு செய்து, சட்டப்படி நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்.

E. இவ்வழக்கின் உண்மை நிலை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, நடைபெற்று வரும் விசாரணையின் நியாயம், சுதந்திரம் மற்றும் நேர்மையைப் பாதுகாக்கும் வகையில், நீதிமன்றம் தகுந்ததாகக் கருதும் பிற உத்தரவுகளையும் பிறப்பிக்க வேண்டும்.

---

### அமைச்சரின் போதைப்பொருள்

# வீடியோ வெளியிட்டதாக கூறி மிரட்டப்பட்டவர் திடீர் கைது!

*சென்னை, ஜூலை 5 -*

பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்திய த.வெ.க. அமைச்சர் சரத்குமாரின் வீடியோவை வெளியிட்டதாக மிரட்டப்பட்ட அவரது நண்பர் சரண் ஜெயராமனை மற்றொரு பொய் வழக்கில் காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

ஐ.பி.எல் போட்டியின் போது அமைச்சர் சரத்குமார் செல்போனில் ஏ.டி.எம் கார்டை வைத்து போதைப் பொருளை நசுக்குவது போன்ற வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. இந்த விவகாரத்தால் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரி திமுக சார்பில் தமிழகம் முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன.

அமைச்சர் சரத்குமாரின் நண்பர் சரண் ஜெயராமன் இந்த வீடியோவை வெளியிட்டதாக த.வெ.க.வினர் கூறி வருகின்றனர். தனக்கும் தனது குடும்பத்திற்கும் அமைச்சர் ஆதரவாளர்களால் ஆபத்து உள்ளதாகக் கூறி, சரண் ஜெயராமன் தாம்பரம் காவல் ஆணையரிடம் இரு தினங்களுக்கு முன் புகார் அளித்திருந்தார். அமைச்சர் சரத்குமாரின் ஆதரவாளர்கள் கத்தியுடன் வந்து தன்னை மிரட்டுவதாகவும் அந்த புகாரின் சரண் ஜெயராமன் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், போதைப் பொருள் வீடியோவை அம்பலப்படுத்தியதால் பழி வாங்கும் நடவடிக்கையாக மற்றொரு பொய் வழக்கில் சரண் ஜெயராமனை போலீசார் நேற்று அதிகாலை கைது செய்தனர். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்துள்ளதை வேடிக்கை பார்க்கும் த.வெ.க. அரசு, தங்களை விமர்சிப்பவர்களையும், தங்களின் உண்மை முகத்தையும் அம்பலப்படுத்துபவர்களையும் பழிவாங்கும் நோக்கில் கைது செய்வதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

---

# செல்லாது செல்லாது!

**செந்தில் பாலாஜி**

**அனிதா ராதாகிருஷ்ணன்**

**சிவசங்கர்...**

**இப்படியாக**

**வாக்கால்**

**வீழ்த்த**

**இயலாதவர்களை**

**வழக்கால்**

**வதைக்கவும்**

**முடிந்தால்**

**வளைக்கவும்**

**தவெக ஆடும்**
**பரமபதமே**

**காக்கிகளை**
**ஆள் தூக்கும்**
**ஜாக்கிகளாக்குவது...**



**ஹுகூம்...**

**வாய்ப்பில்லை**
**ராஜா**

**மிசாவை பார்த்த தி.மு.க.வுக்கு**

**மீம்ஸ் கட்சி எல்லாம்....**

**என்னநாஞ்**
**சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*


# கண்ணீர் அஞ்சலி



அந்தியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
**A.G. வெங்கடாசலம் Ex., MLA.,**
**A.G. தர்மராஜ் ,**
**A.G. மணிமாறன் - வளர்பிறை கேபிள்**
ஆகியோரின் தாயார்

**திருமதி. A.G. குப்பாயம்மாள் அவர்கள்**

4.07.2026 சனிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்
என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்
அவரது பிரிவால் வாடும்
**குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும்**
**திராவிட முன்னேற்றக் கழகம்**
**அந்தியூர் சட்டமன்ற தொகுதி.**